தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

# நாகப்பட்டினம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(22.06.2024 முதல் 26.06.2024)

அறிக்கைஎண்: 24/2024 தேதி : 21.06.2024

## நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35 - 36 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 23 - 27 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது

## நாகப்பட்டினம் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (22.06.2024 முதல் 26.06.2024).

| கடந்த வார வானிலை (18.06.2024 முதல் 20.06.2024) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (22.06.2024 முதல் 26.06.2024) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 18/06 | நாள்-2 19/06 | நாள்-3 20/06 | தேதி | நாள்-1 22/06 | நாள்-2 23/06 | நாள்-3 24/06 | நாள்-4 25/06 | நாள்-5 26/06 |
| 0.0 | 0.5 | 1.8 | மழை (மி.மீ.) | 0 | 2 | 8 | 12 | 5 |
| 36 | 36 | 35 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 34 | 35 | 35 | 34 | 33 |
| 27 | 25 | 23 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 25 | 25 | 24 | 24 | 23 |
| 5 | 4 | 7 | மேகமூட்டம் (ஆக்டா) | 6 | 7 | 6 | 8 | 6 |
| 73-65 | 66-69 | 77-64 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60-50 | 80-70 | 80-50 | 80-60 | 80-70 |
| 7 | 9 | 5 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 18 | 22 | 24 | 18 | 16 |
| தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் மேற்கு | காற்றின் திசை | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

## நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 23.06.2024 முதல் 26.06.2024 ஆகிய தினங்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33 - 37 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23 - 25 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 60 - 80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50 - 70 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 16 – 24 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| பொது | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பரிந்துரைக்கப்பட்ட வேளாண் சார்ந்த செயலிகளை பயன்படுதுமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது (TNAU AAS, Meghdoot and DAMINI). |

| | | |
|---|---|---|
| நெல் | நடவு வயல் | குறுவை நடவு செய்யும் பொழுது பதினெட்டு முதல் இருபத்தி இரண்டு நாட்கள் வயதுடைய நன்கு வாளிப்பான நாற்றுக்களை உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் (1 கிலோ/ 125 மிலி) மற்றும் பாஸ்போபாக்டீரியாவை (1 கிலோ/ 125 மிலி) 40 லிட்டர் தண்ணீரில் இட்டு நாற்றுகளின் வேர் பாகம் கரைசலில் நன்கு நனையுமாறு 15 முதல் 30 நிமிடங்கள் வரை வைத்திருந்து பிறகு 20 x 10 செ.மீ. இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். |
| பருத்தி | வளர்ச்சி பருவம் | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக பருத்தியில் பூ மற்றும் பிஞ்சு உதிர்வதை தடுக்க நாப்தலின் அசிடிக் அமிலம் 40 பிபிம் கரைசலை விதைத்த 60 மற்றும் 90 வது நாளில் தெளிப்பதால் மொட்டுகள் உதிர்வது குறைக்கப்பட்டு காய்கள் அதிகம் பிடிக்க உதவுகிறது. |
| கரும்பு | வளர்ச்சி பருவம் | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக 5 மாதங்களுக்கு மேலான கரும்பு பயிறில் தோகையை நீக்கி விட்டம் கட்டவும். |
| கால்நடைகளுக்கு | மாடு | விவசாயிகள் கறவை மாடுகளுக்கு போதிய அளவு தாது உப்பு கலவையை அளிக்கலாம் |

## குறுஞ்செய்தி

உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பரிந்துரைக்கப்பட்ட வேளாண் சார்ந்த செயலிகளை பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது (TNAU AAS, Meghdoot and DAMINI).

**இயக்குநர்**